தினமணி

**கடலூர் விவசாயிகளைக் கவரும் கோழிக் கொண்டைப் பூக்கள்**

First Published : 10 Apr 2010 12:00:00 AM IST
Last Updated : 10 Apr 2010 06:24:38 AM IST



சிவப்பு, மஞ்சள் கோழிக் கொண்டைப் பூக்கள்.

கடலூர், ஏப். 9: மல்லிகை, முல்லை, ரோஜா என மணம் வீசும் மலர்கள் மங்கையர் சூடிக் கொள்வதாலும் மாலைகளை அலங்கரிப்பதாலும் பெருமைப்படுகின்றன.

ஆனால் வாசமில்லா மலர்கள் பல, அவற்றின் கண்கவர் அழகு காரணமாக, மாலைகளில் மற்ற மலர்களுடன் சேர்த்துத் தொடுக்கப்படுவதால் பெருமைப்படுகிறது.

அந்த வரிசையில் முக்கிய மலராகக் கருதப்படுகிறது கோழிக் கொண்டை செடியின் பூக்கள். ஆங்கிலத்தில் இது இஉகளுநஐஅ என்று அழைக்கப்படுகிறது. கிரேக்க மொழியில் இருந்து வந்த இச்சொல்லுக்கு கொழுந்துவிட்டு எரிதல் என்று பொருள். கோழிக்கொண்டை பூக்கள் சிவப்பு நிறத்தில் மட்டுமன்றி, மஞ்சள், ஆரஞ்சு நிறங்களிலும் கிடைக்கின்றன.

சிவப்பு ரோஜா மாலைகளில் இடையிடையே கோழிக் கொண்டை பூக்களும் சேர்த்து தொடுக்கப்பட்டு, ரோஜா பூவைப் போன்ற தோற்றத்தையும் அந்தஸ்தையும் கோழிக் கொண்டப் பூக்கள் பெற்றுவிடுகின்றன. பல வண்ண மாலைகளில் கண்ணைக் கவரும் சிவப்பு, மஞ்சள், ஆரஞ்சு நிறங்களுக்காக கோழிக் கொண்டைப் பூக்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் கோழிக்கொண்டை பூக்கள் 8 நாள்கள் வரை வாடாமல் இருப்பதும் அதன் பயன்பாட்டுக்கு முக்கியக் காரணம் என்று பூக்கடைக் காரர்கள் தெரிவிக்கிறார்கள்.  சேவற்கோழியின் கொண்டை போன்ற தோற்றமும் நிறமும் இருப்பதால், இப்பூக்கள் கோழிக் கொண்டை பூக்கள் எனப் பெயர் பெற்றுள்ளன. மேலை நாடுகளில் கோழிக் கொண்டை பூக்கள் பூங்கொத்துகளில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

கோழிக்கொண்டைச் செடிகள் கீரை வகையைச் சேர்ந்தவை. உலகம் முழுவதும் வெப்பப் பிரதேசங்களில் பயிரிடப்படுகிறது. வெயில் காலத்தில் நன்றாகச் செழித்து வளரும் தன்மை கொண்டது. வட அமெரிக்காவில் ஆண்டு முழுவதும் கோழிக் கொண்டை பயிரிடப்படுகிறது.

தமிழகத்தில் திண்டுக்கல் மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் அதிகமாகப் பயிரிடப்பட்டு, மலர்கள் பல மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.  மற்ற மாவட்டங்களிலும் பரவலாக காணப்படுகிறது. குறைந்த தண்ணீர்

செலவு, குறைந்த பராமரிப்பு சாகுபடி முறையால் கோழிக்கொண்டை செடிகள், விவசாயிகளைக் கவரத் தொடங்கி இருக்கின்றன. தற்போது கடலூர் மாவட்ட விவசாயிகளும் கோழிக் கொண்டை பயிரிடத் தொடங்கி இருக்கிறார்கள். கடலூரை அடுத்த நாணமேடு, ராமாபுரம் பகுதிகளில் இந்த ஆண்டு கோழிக் கொண்டை செடிகள் சுமார் 100 ஏக்கரில் பயிரிடப்பட்டு உள்ளன. திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் இருந்து கோழிக்கொண்டை பூக்களைத் தருவித்து வந்த கடலூர் மலர் வியாபாரிகள், தற்போது கடலூரிலேயே இப்பூக்களை வாங்கத் தொடங்கி உள்ளனர்.
விவசாயிகள் கோழிக் கொண்டைச் செடிகளைப் பயிரிடுவதற்கு முன்பே, பூ வியாபாரிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். கடலூரில் கோழிக் கொண்டை பூக்களின் விலை சாதாரணமாக கிலோ ரூ.10 முதல் ரூ.20 வரை இருக்கும். ஆனால் சில காலங்களில் கிலோ ரூ.200 வரைகூட உயர்ந்து விடும் என்று பூ வணிகர்கள் தெரிவிக்கிறார்கள்.
இதுகுறித்து கடலூர் தோட்டக்கலைத் துறை வேளாண் அலுவலர் ரவிச்சந்திரன் கூறுகையில், பூக்கடைக்காரர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டால் மட்டுமே கோழிக் கொண்டை செடிகளைப் பயிரிட முடியும். கீரை வகையைச் சேர்ந்ததாக இருப்பதால் விதையைக் கொண்டு செடிகளை எளிதில் உற்பத்தி செய்து விடலாம். 3 மாதப் பயிரான கோழிக்கொண்டை வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை கொண்டது. ஹெக்டேருக்கு 10 டன்கள் வரை பூக்கள் கிடைக்கும். அதிக செலவு இன்றி ஹெக்டேருக்கு குறைந்தபட்சம் ரூ.1 லட்சம் வருவாய் கிடைக்கும் என்றார்.
மேலை நாடுகளில் பூங்கொத்துகளில் அதிக அளவில் கோழிக்கொண்ட பூக்களைப் பயன்படுத்துவதால், இப்பூக்களை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளைக் கண்டறிந்தால், நல்லதொரு பணப்பயிராக கோழிக்கொண்டையை மாற்ற முடியும் என்பது விவசாயிகளின் கருத்து.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 74.04 அடி**

First Published : 10 Apr 2010 12:59:57 AM IST

ஈரோடு  ஏப்.9: பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை 74.04 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 859 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. ஆற்றில் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது.
பாசன வாய்க்காலில் விநாடிக்கு 2300 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையிôன் நீர் இருப்பு 12 டிஎம்சி.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 71.58 அடி**

First Published : 09 Apr 2010 11:35:20 PM IST

சேலம், ஏப்.9: மேட்டூர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 71.58 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 2,095 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,900 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.
அணை நீர் இருப்பு 34.07 டி.எம்.சி.

**நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க விவசாயிகள் வலியுறுத்தல்**

First Published : 10 Apr 2010 05:41:17 AM IST

திருவண்ணாமலை, ஏப்.9: திருவண்ணாமலை தாலுகாவில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.
திருவண்ணாமலை வட்ட விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் தாலுகா அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கோட்டாட்சியர் பத்மா தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் சில விவசாயிகள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்காததால் ஊழல் நடக்கிறது. உடனே நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும் என வலியுறுத்தி கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தனர். பின்னர் தாலுகா அலுவலகம் முன் கோஷமிட்டனர்.

தொடர்ந்து பேசிய விவசாயிகள், கூட்டுறவு வங்கிகளில் தனிநபர் கடன் தருவதில்லை. ரேஷன் கடைகளில் தரமான அரிசி வழங்க வேண்டும். குறைதீர்க் கூட்டத்துக்கு அதிகாரிகள் சரிவர வருவதில்லை என புகார் தெரிவித்தனர்.

கூட்டத்துக்கு வராத அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்படும். அடுத்தக் கூட்டத்தில் அனைவரும் வர நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் கோட்டாட்சியர்.

கமலப்புத்தூர் பொதுப்பணித் துறை ஏரியில் மரங்களை வெட்டிச் செல்கின்றனர். அதைத் தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாதலாம்பாடி, நூக்காம்பாடி, தச்சம்பாடி சாலையில் ஆக்கிரமிப்புகள் உள்ளன. அவற்றை அகற்ற வேண்டும். எம்.என்.பாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் பால் கொள்முதல் தொகையை தர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கமலபுத்தூரில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் கரும்பு விவசாயிகள், கூட்டு பொறுப்புக் குழுக்களுக்குத்தான் கடன் தருகின்றனர். தனி நபர்களுக்கு சரிவர கடன் தருவதில்லை என சில விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த கூட்டுறவு அலுவலர், கரும்பு விவசாயிகளுக்கு கடன் தந்தால் கரும்பு ஆலையில் செலுத்தி விடுகின்றனர். தனிநபர் கடன் பெறுவோர் சரிவர செலுத்துவதில்லை
என்றார்.

**வேதாரண்யத்தில் விவசாயிகள் சங்கப் பொதுக்கூட்டம்**

First Published : 10 Apr 2010 06:36:41 AM IST

வேதாரண்யம், ஏப். 9: நாகை மாவட்டம், வேதாரண்யத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொது மாநாட்டு பொதுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்றது.

நாகப்பட்டினம் மாவட்ட தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் (இந்திய கம்யூ சார்பு) 22-வது மாநாடு வேதாரண்யம் எஸ்.கே.எஸ், வி.வி திருமண மண்டபம், பொ.பக்கிரிசாமி நினைவரங்கத்தில் நடைபெற்றது.

இதையடுத்து ராஜாஜி பூங்காவில் நடைபெற்ற பொது மாநாட்டு பொதுக்கூட்டத்துக்கு மாவட்ட சங்கத்தின் செயலர் எஸ்.சம்பந்தம் தலைமை வகித்தார். மாநிலக் குழு உறுப்பினர் ப.இளங்கோவன், வி.சரபோஜி மன்னிலை வகித்தனர்.

இந்திய கம்யூ கட்சி மாவட்டச் செயலாளர்கள் எம்.செல்வராசு, (நாகை), வெ.வீரசேனன் (திருவாரூர்) மாநிலக் குழு உறுப்பினர்கள் ஆர் சந்திரசேகர ஆசாத், பி.எஸ்.மாசிலாமணி, நிர்வாகிகள் ஏ.ராசு,எம்.ஏ.கே.சுபாஷ் சந்திரபோஸ், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலர் டி.செல்வம், வரவேற்புக் குழு நிர்வாகிகள் த.நாராயணன், ப.இளங்கோவன், சிவகுரு.பாண்டியன் , எஸ்.நாராயமசாமி உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

**கூடுதல் விலைக்கு உரம் விற்றால் கடும் நடவடிக்கை**

First Published : 10 Apr 2010 03:45:57 AM IST

Last Updated : 10 Apr 2010 09:20:55 AM IST

ராமநாதபுரம்,ஏப் 9: ராமநாதபுரம் மாவட்டத்தில் கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண் இணை இயக்குநர் ந.சத்தியமூர்த்தி எச்சரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை கூறியதாவது: யூரியா உரத்திற்கு மட்டுமே 1.4.2010 முதல் அதிகபட்ச சில்லறை விற்பனை விலை நடைமுறையில்

இருக்கும். யூரியா அல்லாத இதர உரங்களுக்கு அந்தந்த உர நிறுவனங்களே சில்லரை விற்பனை விலையை நிர்ணயம் செய்துகொள்ளும்.

சில்லறை விற்பனையில் நிறுவனங்களுக்கு இடையே வித்யாசம் இருக்கும். அவ் விலை உர மூட்டையில் குறிக்கப்பட்டிருக்கும். அந்த விலைக்கு மேல் உர விற்பனையாளர்கள் கூடுதலாக விலை வைத்து விற்கக்கூடாது. மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுதொடர்பாக உர விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் அந்தந்த வட்டாரத்தில்
உள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

31.3.2010-க்கு முன்னர் கொள்முதல் செய்யப்பட்ட உரங்களை பழைய அதிகபட்ச சில்லறை விற்பனை விலைக்கே விநியோகம் செய்யவேண்டும் எனவும் உர விற்பனையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இந்நடைமுறைகள் அனைத்தும் வேளாண் துறை அதிகாரிகளால்
திடீரென ஆய்வுசெய்யப்படும். ஊரக வளர்ச்சித்துறை திட்ட இயக்குநரின் கீழ் செயல்பட்டு வந்த வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட திட்டங்களும் 1.4.2010 முதல் ஒருங்கிணைக்கப்பட்டு,
நீர்வடிப்பகுதி திட்டங்கள் அனைத்தும் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு
முகமையின்கீழ் செயல்படும்.

இம் முகமையானது ஆட்சியரை தலைவராகவும், வேளாண்மை இணை இயக்குநரை
திட்ட அலுவலராகவும் கொண்டு கடந்த 1.4.2010 முதல் செயல்பட்டுவருகிறது.
மண்வளத்தைப் பாதுகாத்து நிலத்தடி நீர் வளத்தை உயர்த்தி புதிய வேளாண் தொழில்நுட்பங்கள் மூலம் தரிசு மற்றும் விளைநிலங்களாக மாற்றுவது,
மரங்கள் வளர்த்து வனச்சீரழிவைத் தடுத்து சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துதல் உள்பட பல்வேறு முக்கிய நோக்கங்களை மையமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுகிறது என்றார் சத்தியமூர்த்தி.

**பால் கொள்முதல் விலையை உயர்த்த கோரிக்கை**

First Published : 10 Apr 2010 05:37:58 AM IST

தருமபுரி ஏப்.9: பால் கொள்முதல் விலையை தமிழக அரசு உயர்த்தி வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
தருமபுரி பெரியார் மன்றத்தில் வெள்ளிக்கிழமை சங்கத்தின் மாவட்ட மாநாடு நடைபெற்றது. மாவட்டத் தலைவர் எம். ஆறுமுகம் தலைமை தாங்கினார்.
தருமபுரி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். குடிநீர் பஞ்சத்தை தீர்க்கும் வகையில் தமிழக அரசு போர்க்கால நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தை பாதுகாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.
மாநில பொதுச் செயலர் வே. துரைமாணிக்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலர் பி. இளம்பரிதி, ஏஐடியுசி மாவட்டச் செயலர் ஜி. வெங்கட்ராமன், மாநில செயற்குழு உறுப்பினர் தேவ. பேரின்பன், தருமபுரி வட்டச் செயலர் என். கந்தசாமி, பென்னாகரம் வட்டச் செயலர் ஆர். சிவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**ஏப்ரல் 12 விவசாயிகள் நல வாரியக் கலந்தாய்வு**

First Published : 10 Apr 2010 03:34:45 AM IST

சிவகங்கை, ஏப். 9: சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை (ஏப்ரல் 12) விவசாயிகள் நல வாரிய கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்தில் விவசாயிகள் நல வாரியத் தலைவர் கே.பி. ராமலிங்கம் பங்கேற்று ஆய்வு நடத்தி, நல வாரிய உதவிகள் வழங்க உள்ளார். என்று ஆட்சியர் அலுவலகச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தனியார் பயிர்க் கடனுக்கான வட்டியையும் தள்ளுபடி செய்யவேண்டும்: அதிமுக கோரிக்கை**

First Published : 10 Apr 2010 12:00:00 AM IST

Last Updated : 10 Apr 2010 06:23:26 AM IST

சென்னை, ஏப்.9: தனியார் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்ற பயிர்க் கடனுக்கான வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஓ. பன்னீர்செல்வம் கோரிக்கை விடுத்தார்.

சட்டப் பேரவையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற தமிழக பட்ஜெட் மீதான பொது விவாதத்தை முடித்துவைத்து அவர் பேசியது:

கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர்க் கடனுக்கான வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. ஆனால் 80 சதவீத விவசாயிகள் தனியார் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில்தான் பயிர்க் கடன் பெற்றுள்ளனர். எனவே, இந்த வங்களில் பெற்ற பயிர்க் கடனுக்கான வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

கரும்புக்கு கொள்முதல் விலையாக டன்னுக்கு ரூ. 2,500-ம், நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 1,500-ம் வழங்க வேண்டும் என்பதே அதிமுகவின் கோரிக்கை. ஆனால் நெல்லுக்கு ஊக்கத் தொகையாக ரூ. 50 மட்டும் வழங்கி இந்த அரசு விவசாயிகளை ஏமாற்றியுள்ளது.

அண்டை மாநிலங்களுடான நதிநீர் பிரச்னைகளை தமிழக அரசு சரிவர கையாளவில்லை. அதிமுக ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை 142 அடியாக உயர்த்த உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால், இப்போது முல்லைப் பெரியாற்றின் குறுக்கே புதிய அணை கட்டுவதற்கான ஆய்வு நடத்த கேரளத்துக்கு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் அனுமதி வழங்கியுள்ளார்.

ஆந்திர அரசின் நடவடிக்கையால் பாலாறு பாலைவனாமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வேலூர் மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்ட முயற்சித்து வருவதாகக் கூறப்படுகிறது. இதனைத் தடுக்க வேண்டும்.

ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி கொடுப்பதாக பெருமை பேசுகிறீர்கள். ஆனால் வெளிச்சந்தையில் ஒரு கிலோ அரிசி ரூ. 42-க்கு விற்கிறது. அரிசி கொதிக்கும்போது மக்களின் மனங்களும் கொதிக்கிறது.

தமிழகத்தில் சிக்குன்குனியா உள்பட பல்வேறு மர்மக் காய்ச்சல் பரவி வருகிறது.

அதனால் ஆளும் கட்சி எம்.எல்.ஏ.க்கள்கூட பாதிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வந்துள்ளன. இப்போது போலி மருந்து பூதம் கிளம்பியுள்ளது. இதனைத் தடுக்க சுகாதாரத் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மின் வெட்டு காரணமாக மக்கள் இரவு நேரங்களில் வீதிகளில் இருக்க வேண்டிய நிலை உள்ளது. இலவச கலர் டிவியினால் மக்களின் வறுமை நீங்காது.

நிலக்கரி இறக்குமதியில் பெருமளவு ஊழல் நடந்திருப்பதாக அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதா அறிக்கை விடுத்துள்ளார். இது குறித்து அரசு வெள்ளை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

தமிழகத்தில் தொழில் தொடங்கியுள்ள பன்னாட்டு நிறுவனங்களுக்கு அரசு அளித்துள்ள சலுகைகள், அதனால் கிடைத்த லாபங்கள் குறித்தும் அரசு வெள்ளை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். தொழிற்சாலைகள் தொடங்கும்போது வேலைவாய்ப்பில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என ஒப்பந்தம் போடப்பட்டதா? என்பதை அரசு விளக்க வேண்டும்.

தாற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டத்தை கொண்டுவரக் கூடாது என்று மத்திய அரசை தமிழகம் வலியுறுத்த வேண்டும்.

கூவம் நதியை தூய்மைப்படுத்துவதற்காக "சென்னை நதிநீர் அறக்கட்டளை' அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக இதுபோன்ற திட்டங்களை அரசுதான் நிறைவேற்ற வேண்டும். எதற்காக அறக்கட்டளை? ஏதாவது சிக்கல் வந்தால் தப்பித்துக் கொள்வதற்காகவா?

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. புதிது புதிதாக குற்றவாளிகள் உருவாகி வருகின்றனர். போலி ஐ.பி.எஸ். அதிகாரிகள், சி.பி.ஐ. அதிகாரிகள் உலா வரத் தொடங்கியுள்ளனர் என்றார் பன்னீர்செல்வம்.

தினமலர்

**'எண்ணெய் வித்து உற்பத்தி தொழில்நுட்பம் விவசாயிகளை சென்றடைய வேண்டும்'**

கோவை: "எண்ணெய் வித்து உற்பத்தி தொடர்பான நவீன தொழில் நுட்பங்கள் விவசாயிகளை சரியாக சென்றடைந்தால், எண்ணெய் வித்து உற்பத்தியை 50 சதவீதம் வரை பெருக்க முடியும்," என்று இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில் உதவி இயக்குனர் பட்டீல் கூறினார்.

சூரியகாந்தி, எள் உற்பத்தி குறித்த மூன்று நாள் ஆண்டுக்கூட்டம், கோவை வேளாண் பல்கலையில் நடந்தது. இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலும் வேளாண் பல்கலையும் இணைந்து நடத்திய இக்கூட்டத்தில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த வேளாண் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தை துவக்கி வைத்து பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி பேசியதாவது: சமையல் எண்ணெய் உற்பத்தியில் அமெரிக்கா, சீனா, பிரேசிலுக்கு அடுத்தபடியாக, இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. இந்தியாவின் சமையல் எண்ணெய் தேவை 11.58 மெட்ரிக் டன். தற்போது 7.37 மெட்ரிக் டன் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 40 சதவீத எண்ணெயை இறக்குமதி செய்கிறது. சமீபகாலமாக மக்கள் தொகை மற்றும் வாங்கும் திறன் உயர்வு காரணமாக தனிநபர் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

2015ல் இந்தியாவின் மொத்த சமையல் எண்ணெய் தேவை 18.3 மெட்ரிக் டன் ஆகவும், 2020ல் 21.8 மெட்ரிக் டன் ஆகவும் உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சமையல் எண்ணெய் விஷயத்தில் சுயசார்பு அடைய 2020க்குள் 55 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்ய வேண்டும். இது ஒரு சவாலான பிரச்னை. இதுவரை 43 வகை எண்ணெய் வித்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. எள் மற்றும் பேய் எள் உற்பத்தியில் கூடுதல் கவனம் செலுத்தினால் எண்ணெய் தேவையை ஈடுகட்டி விடலாம்.

பிற பயிர்களை பயிரிடுவதில் விவசாயிகள் அதிக அக்கறையுடன் உள்ளதால், எண்ணெய் வித்து பயிரிடும் பரப்பளவை அதிகரிப்பது சிரமம். ஆகவே விஞ்ஞானிகள் புதிய கலப்பின உற்பத்தியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். பயிர், தொழில்நுட்ப மேலாண்மையில் கவனம் செலுத்தலாம். இவ்வாறு, முருகேச பூபதி கூறினார்.

இக்கூட்டத்தில் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் உதவி இயக்குனர் பட்டீல் பேசியதாவது: எண்ணெய் வித்து உற்பத்தி குறைந்து வருகிறது. இந்த பிரச்னைக்கு விரைவில் தீர்வு காண அரசு முன்வர வேண்டும். எண்ணெய் வித்து உற்பத்தி தொடர்பான நவீன தொழில் நுட்பங்கள் விவசாயிகளை சரியாக சென்றடைவதில்லை. இத்தொழில் நுட்பங்கள் சரியாக சென்றடைந்தால், எண்ணெய் வித்து உற்பத்தியை 50 சதவீதம் வரை பெருக்க முடியும். தொழில் நுட்பங்கள் விவசாயிகளை சென்றடைவதில், வேளாண் விஞ்ஞானிகளின் பங்கு முக்கியம்.

தொழில் நுட்பங்களை விவசாயிகளை நேரடியாக அடையச் செய்வது பெரும் சவால் ஆகவே உள்ளது. எண்ணெய் வித்து உற்பத்தி வீழ்ச்சியால் ஏற்பட்டுள்ள பாதிப்பை, பாமாயில் இறக்குமதி ஓரளவு ஈடு செய்கிறது. மக்களின் மொத்த பயன்பாட்டை விட எண்ணெய் உற்பத்தி குறைவாகவே உள்ளது. எண்ணெய் வித்து தொழில் நுட்ப திட்டத்தை அறிமுகம் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இவ்வாறு இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் உதவி இயக்குனர்

பட்டீல் பேசினார். பல்கலையின் ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா, திட்ட ஒருங்கிணைப்பாளர் ரங்கநாதா, தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மைய இயக்குனர் தியாகராஜன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு புல் வெட்டும் கருவி வழங்கல்**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 50 விவசாயிகளுக்கு புல்வெட்டும் கருவி வழங்கப்பட்டது. தர்மபுரி மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மூலம் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கரும்பு சோகையை கொண்டு ஊறுகாய்புல் தயாரித்தல் திட்டம் மற்றும் விவசாயிகளுக்கு புல்வெட்டும் கருவி வழங்கும் விழா தர்மபுரி கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் அலுவலக வளாகத்தில் நடந்தது. கலெக்டர் அமுதா தலைமை வகித்து, 50 விவசாயிகளுக்கு புல்வெட்டும் கருவி மற்றும் மானியத் தொகையை வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது: தீவனப்பயிர் சாகுபடி திட்டத்தின் கீழ் ஒவ்வொரு யூனியனுக்கும் நான்கு ஏக்கர் வீதம் 32 சுயஉதவிக் குழுவினர் மற்றும் ஆத்மா திட்டக்குழுவினருக்கு ஏக்கருக்கு 5,000 ரூபாய் வீதம் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் எட்டு சுயஉதவிக் குழுவினருக்கு ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 88 மானியமாக வழங்கப்பட்டது. இவ்வாறு அவர் பேசினார். கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் தயாநிதி, வேளாண் இணை இயக்கனர் முகமது அலி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பேராசிரியர் முருகேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக தர்மபுரி கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் பாலசுப்ரமணியம் வரவேற்றார்.

**முதல் போக சாகுபடிக்கு தயாராகும் விவசாயிகள் கொடிவேரி பழைய பாசனத்துக்கு நீர் கிடைக்குமா?**

கோபிசெட்டிபாளையம்:கொடிவேரி பழைய பாசனப்பகுதியான அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பாசனப் பகுதியில் நடப்பாண்டு முதல் போக சாகுபடிக்காக, நிலத்தை பதப்படுத்தும் பணியில் விவசாயிகள் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளனர். பவானிசாகர் அணையில் இருந்து கொடிவேரி அணை மூலம் ஆண்டுக்கு இரண்டு முறை அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர் மட்டம் நேற்று காலை 12 மணி நிலவரப்படி 73.98 அடியாக உள்ளது. இதனால், முதல்போக சாகுபடிக்கு வரும் 15ம் தேதி வழக்கம்போல் தண்ணீர் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதியை சேர்ந்த விவசாயிகளும், நிலத்தை தயார்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மஞ்சளுக்கு கூடுதல் விலை, சர்க்கரை விலை உயர்வு, கரும்புக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு ஆகிய காரணங்களால் கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பகுதியில் நடப்பாண்டு அதிகளவில் மஞ்சள் மற்றும் கரும்பு பயிரிட விவசாயிகள் ஆர்வத்துடன் உள்ளனர். இதனால், கடந்த ஒரு மாதத்துக்கு முன்பே இயற்கை அடி உரமாக சணப்பையை பயிரிட்டுள்ளனர். பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டவுடன், சணப்பையை நிலத்தில் அப்படியே ஓட்டி விட்டு உரமாக மாற்றி விடுவர். பின்னர், கரும்பு உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்வர். மேலும் நிலத்துக்கு உரங்கள் மற்றும் மக்கிய குப்பைகளை போட்டு பதப்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

**கோடைக்கு இதமாக கொடைக்கானல் ப்ளம்ஸ் ஈரோட்டில் தள்ளுவண்டிகளில் விற்பனை**

ஈரோடு: கோடை வெயிலுக்கு இதமாக, ஈரோடு மார்க்கெட்டுக்கு கொடைக்கானல் ப்ளம்ஸ் பழங்கள் வரத்து துவங்கியது. தள்ளுவண்டிகளில் வைத்து விற்பனை செய்யப்படுகிறது. எலுமிச்சை வரத்து குறைவால் ஒரு பழம் மூன்று ரூபாய் வரை விற்கப்படுகிறது. அக்னி வெயில் துவங்குவதற்கு முன்பே கடந்த சில வாரங்களாக கோடை உஷ்ணம்

மக்களை வாட்டி எடுத்து வருகிறது. உச்சிவெயில் நேரத்தில் பொதுமக்கள் வெளியில் நடமாட முடியாமல் தவித்து வருகின்றனர். வெயில் கொடுமை தாங்க முடியாமல் இளநீர், ஜூஸ், ஐஸ்கிரீம் போன்றவற்றை பருகி தங்கள் உடல் உஷ்ணத்தை மக்கள் தணிக்கின்றனர். ஜூஸ் தயாரிப்பில் முலாம்பழம், ஆப்பிள், திராட்சை, சாத்துக்குடி போன்ற பழங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. நடப்பாண்டு பழங்கள் வரத்து மிகவும் குறைந்துவிட்டது என்றே சொல்லலாம். பருவ நிலை காரணமாக பழங்கள் உற்பத்தி சரியாக இல்லை. ஒரு சில இடங்களில் இருந்து மட்டுமே பழங்கள் வரத்தாகிறது. பழங்கள் வரத்து குறைவால் அனைத்து வகையான பழங்கள் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. மற்ற பழங்களின் வரத்து குறைந்த நிலையில் கொடைக்கானல் பகுதியில் இருந்து பிளம்ஸ் பழம் வரத்து துவங்கியுள்ளது. சிறிய ஆப்பிள் பழம் போல் காணப்படும் பிளம்ஸ் பழம் இனிப்பு, புளிப்பு கலந்த சுவையுடன் உள்ளது. ஒரு கிலோ பிளம்ஸ் பழம் 80 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கோடை வெயிலுக்கு பிளம்ஸ் பழம் இதமாக இருப்பதால் மக்கள் அனைவரும் வாங்கிச் செல்கின்றனர்.

வீடுகளில் உடனடியாக தாகம் தணிக்க உதவுவது எலுமிச்சை பழம் ஜூஸ். எலுமிச்சை பழத்தை பிளிந்து, தண்ணீர், சர்க்கரை கலந்தால் ஜூஸ் தயாராகி விடுகிறது. தமிழகம் முழுவதும் வெயில் வாட்டுவதால் எலுமிச்சை உற்பத்தி குறைந்துள்ளது. பழங்கள் வரத்து குறைந்த காரணத்தால் ஒரு ரூபாய் விற்கப்பட்ட பழம் மூன்று ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வியாபாரிகள் கூறியதாவது: கொடைக்கானல் பகுதியில் இருந்து பிளம்ஸ் பழம் வரத்தாகிறது. சீஸன் ஆரம்பிக்க இன்னும் ஒரு சில வாரங்களாகும். தற்போது அளவில் சிறிய பிளம்ஸ் பழங்கள் வரத்தாகிறது.

ஊட்சி உள்ளிட்ட பகுதியில் இருந்தும் பிளம்ஸ் பழங்கள் வரத்து ஆரம்பமாகும் போது விலை குறையும். எலுமிச்சை பழத்தை பொறுத்தவரை திண்டுக்கல், கிருஷ்ணகிரி, சேலம் பகுதியில் இருந்து அதிகளவில் வரத்தாகிறது. வெயில் அதிகளவில் அடிப்பதால் பழம் வரத்து குறைந்து விட்டது. சென்ற சில வாரங்களுக்கு ஒரு மூட்டை எலுமிச்சை 3,500 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வரத்து குறைந்த காரணத்தால் ஒரு மூட்டை 4,200 முதல் 4,700 ரூபாய்க்கு வாங்குகிறோம். எலுமிச்சை விலை உயர்வால் ஒரு சிலர் மட்டுமே பழம் வாங்கி செல்கின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**நூல் விலை குறைக்க வணிகர் கூட்டமைப்பு வலியுறுத்தல்**

ஈரோடு: நூல் விலையை குறைக்க வேண்டும் என அனைத்து வணிக சங்கங்களின் கூட்டமைப்பு மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. கூட்டமைப்பு தலைவர் சிவநேசன் கூறியதாவது:உலக அளவில் பருத்தி உற்பத்தியில் மூன்றாவது இடத்தில் உள்ள நாடு இந்தியா. பருத்தி பயிரிடும் பரப்பு குறைந்ததால், நம் நாட்டின் உற்பத்தி நமக்கே போதுமானதாக இல்லை. 93 லட்சம் ஹெக்டேர் மட்டுமே பருத்தி விளைச்சல் உள்ளது. வேளாண் மூலப் பொருளான பருத்தி தற்சமயம் பல்வேறு வரிகளுக்கு உட்படுவதாலும், உற்பத்தி செலவு அதிகம் இருப்பதாலும் 15 ஆயிரம் ரூபாய் அளவில் இருந்த ஒரு குவிண்டால் பருத்தி விலை, தற்சமயம் 30 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது. முக்கியமாக கழிவுப் பஞ்சின் மூலம் நெய்யப்படும் துணிகள் பாமர மக்கள் பயன்பாட்டுக்கே அதிகம் பயன்படுகின்றன.

இவற்றின் ஏற்றுமதி இந்த துறை வளர்ச்சியை வெகுவாக பாதித்துள்ளது. ராஜபாளையம், மதுரை பகுதியில் உள்ளது போல் ஈரோடு, கோவை, திருப்பூர், கரூர் ஆகிய பகுதிகளில் நூல் வங்கிகள் உருவாக்க வேண்டும். சென்ற 2009 விலையை ஒப்பிடுகையில் தற்போது 35 சதவீதம் அதிகரித்துள்ளது. விலையை கட்டப்படுத்த வேண்டும் என்றால் கச்சாப்பஞ்சு ஏற்றுமதியை நம் நாட்டின் தேவைக்கு மிகுதியாக இருந்தால் மட்டுமே ஏற்றுமதி செய்ய வேண்டும். கழிவுப்பஞ்சு ஏற்றுமதியை முற்றிலும் தடை செய்ய வேண்டும். பஞ்சு மற்றும் நூல் பதுக்கி வைப்போர் மீது தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். நூல் ஏற்றுமதி செய்பவர்களுக்கு கொடுக்கப்படும் 7.67 சதவீத ஊக்குவிப்பு மானியம் நிறுத்தப்பட வேண்டும். பருத்தி நூலை அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும். பருத்தி விற்பனை மீதான மத்திய விற்பனை வரி இரண்டு சதவீதம் மற்றும் கோன் நூல் மீதான நான்கு சதவீத மதிப்பு கூடுதல்

வரி, இறுதி கழிவுப் பஞ்சை விற்கும்போது விதிக்கப்படும் நான்கு சதவீத மதிப்பு கூடுதல் வரி மற்றும் மாநில வேளாண் விற்பனை வாரியம் மூலம் விதிக்கப்படும் ஒரு சதவீத செஸ் வரி ஆகியவற்றை கணக்கில் எடுத்தால், வரியாகவே மொத்தம் 11 சதவீதம் சென்று விடுகிறது. பருத்தி மீதான அனைத்து வரிகளையும் நீக்க வேண்டும்.

தேசிய வேளாண் ஆணைய பரிந்துரை படி பருத்தி விவசாயிகளுக்கு விலையில் 30 சதவீத மானியம் வழங்கி விலையை சமன்படுத்த வேண்டும். தமிழகத்தில் உள்ள 1,000 கழிவு பஞ்சு உற்பத்தி செய்யும் மில்களில் தற்சமயம் 15 சதவீதம் மூடப்பட்டுள்ளது. 50 சதவீத மில்களில் தினமும் ஏற்படும் ஏழு மணி நேர மின்தடையால் உற்பத்தி பாதித்துள்ளது. மில்களுக்கு தடையில்லாத மின்சாரம் வழங்க வேண்டும். நூல் மில்கள் தன்னிச்சையாக விலை உயர்வு செய்வதை தடுக்க நூல் கொள்கை கொண்டு வருதல் வேண்டும். வேளாண் பொருள்கள் அனைத்தையும் 'ஆன் லைன்' வணிகத்தில் இருந்து நீக்க வேண்டும். காட்டன் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவில் பதிவு பெற்ற நூல் மில்களுக்கு பஞ்சை மானியம் விலையில் வழங்க வேண்டும். நூல் மீதான அதிகபட்ச சில்லரை விலையை அரசு நிர்ணயிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**இடிக்கப்பட்ட உரக்கிடங்கை மீண்டும் கட்டித்தர விவசாயிகள் வலியுறுத்தல்**

மணல்மேடு : மணல்மேட்டில் இடிக்கப்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி உரக்கிடங்கை மீண்டும் கட்டித்தர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மணல்மேடு தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியின் வாயிலாக வரதம்பட்டு, திருவாளப்புத்தூர், கடக்கம், முடிகண்டநல்லூர், மணல்மேடு போன்ற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கடன் மற்றும் உரம் பெற்று பயனடைந்து வருகின்றனர். இந்த வங்கி மூலம் விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் சுமார் 450 டன் உரம் வழங்கப்பட்டு வருகிறது. உரங்களை பாதுகாப்புடன் இருப்பில் வைக்க வங்கி பின்புறம் உரக்கிடங்கு செயல்பட்டு வந்தது.
தொடர்ந்து இந்த உரக்கிடங்கு சிதிலமடைந்ததால் கடந்த 2007ம் ஆண்டு முற்றிலும் இடிக்கப்பட்டது. தற்போது உரக்கிடங்கு தனியாருக்கு சொந்தமான இடத்தில் இயங்கி வருகிறது. இதனால் வங்கிக்கு இழப்பு ஏற்படுவதுடன் விவசாயிகள் வங்கியில் பில் பெற்று உரம் பெறுவதற்காக வேறு இடத்திற்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. இடிக்கப்பட்ட உரக்கிடங்கை கட்ட எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் அப்பகுதியில் முட்புதர் மண்டிக்கிடக்கிறது. எனவே உரக்கிடங்கு கட்டடத்தை புதிதாக கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

கீழ்வேளூர் : கீழ்வேளூர் அருகே கடலாக்குடியில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.
விதை கிராம திட்டத்தின் கீழ் நடந்த முகாமிற்கு மாணலூர் ஊராட்சித் தலைவர் புருஷோத்தமதாஸ் தலைமை வகித்தார். தண்டபாணி முன்னிலை வகித்தார். கீழ்வேளூர் வேளாண் உதவி அலுவலர் ராஜராஜன் தரமான விதை நேர்த்தி, நாற்றங்கால் பராமரிப்பு போன்றவை குறித்து விளக்கினார். வேளாண் உதவி அலுவலர்கள் ராஜ்குமார், காளிதாஸ் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண் துணை அலுவலர் சின்னையன் வரவேற்றார். வைரப்பன் நன்றி கூறினார்.

**விவசாய மானிய கோரிக்கையில் 'கள்' இறக்க அனுமதிக்கப்படுமா? கள் இயக்கம் போராட்ட அறிவிப்பு**

நாமக்கல்: 'ஏப்ரல் 12ம் தேதி நடக்கும் விவசாய மானியக் கோரிக்கை மற்றும் 13ம் தேதி மதுவிலக்கு ஆயத்தீர்வை மானிய கோரிக்கை மீதான விவாதம் நடக்கிறது. அதில், கள் இறக்குவது சம்மந்தமாக எந்த ஒரு அறிவிப்பும் இல்லாவிட்டால், மே 14ம் தேதி சென்னையில் கண்டன ஆர்பாட்டம் நடத்தப்படும்' என, தமிழ்நாடு கள் இயக்கக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாமக்கல்லில் தமிழ்நாடு கள் இயக்க ஆலோசனைக் கூட்டம் நடந்தது. ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி தலைமை வகித்தார். தமிழக விவசாயிகள் சங்க தலைவர் ராமசாமி முன்னிலை வகித்தார். கூட்டத்தில், தமிழக அரசின் பட்ஜெட்டில் கள்ளுக்கு விதித்த தடையை நீக்குவது தொடர்பான எந்த ஒரு அறிவிப்பும் இல்லை.

சட்டப்பேரவையில் விவசாய மானிய கோரிக்கை ஏப்ரல் 12ம் தேதியும், மதுவிலக்கு ஆயத்தீர்வை மானியக் கோரிக்கை மீதான விவாதம்13ம் தேதியும் நடக்க உள்ளது. விவாதத்தின்போது, அரசின் தரப்பில் ஆதரவான பதில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எந்த அறிவிப்பும் இல்லாவிட்டால், மே 14ம் தேதி சென்னையில் கண்டன ஆர்பாட்டம் நடத்தப்படும். கள்ளுக்கு எதிராக செயல்படுவர்களை 2011ம் ஆண்டு சட்டசபை தேர்தலில், கள் இயக்கும் தோற்கடிக்கும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க செயலாளர் தங்கராஜ் உட்பட பலர் பங்கேற்றனர்.

**மலை காய்கறி விவசாயம் 'தூள்'**

மஞ்சூர்: மஞ்சூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில், மலை காய்கறி விவசாயம் அதிகரித்துள்ளது. மஞ்சூர் அருகே பாலகொலா, துகுலா, நுந்தளா, மீக்கேரி, மணிஹட்டி, கல்லக்கொரை, எம்.பாலாடா, பெம்பட்டி, இத்தலார், போர்த்தி, புது ஹட்டி உட்பட கிராமங்களில் உள்ள விவசாயிகள் பலர், மலை காய்கறி விவசாயத்தை பிரதான தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். தற்போது, கேரட், முட்டைகோஸ், பீட்ரூட், பீன்ஸ், டபுள் பீன்ஸ், உருளைக்கிழங்கு உட்பட மலை காய்கறிகள் பயிரிட்டுள்ளனர். போதிய மழை இல்லை என்றாலும், 'ஸ்பிரிங்லர்' மூலம், தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சுகின்றனர்; வரும் 2 மாதங்களில் அறுவடைக்கு தயாராகும் என தெரிவித்துள்ளனர். கல்லக்கொரை விவசாயி ராமன் என்பவர் கூறுகையில், " காய்கறிகளுக்கு போதிய விலை கிடைத்து வருகிறது. மருத்து தெளிப்பான் களுக்கு விலை குறை ந்தால், விவசாயிகளின் எண் ணிக்கை அதிகரிக் கும்," என்றார்.

**விவசாய உற்பத்திக்கு ரூ. 566 கோடி ஒதுக்கீடு வளர்ச்சி திட்டத்தில் அறிவிப்பு**

சிவகங்கை: மாவட்டத்தில் விவசாயத்தை ஊக்கப்படுத்தவும், மகளிர் குழுவினரின் வருமானத்தை அதிகரிக்கவும், நடப்பு ஆண்டில் 970.51 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட உள்ளது.
இதில் விவசாயத்திற்காக மட்டும் 566 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
உணவு பொருள் உற்பத்தியை அதிகரிக்க, நெல், பருப்பு, பயறு வகைகள் நடவு செய்வதை ஊக்கப்படுத்தவேண்டும் என, தேசிய உணவு பயிர் பாதுகாப்பு திட்டத்தில் மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.
கடன்: இதற்காக வங்கிகள் மூலம் அதிகளவில் கடன் வழங்கப்படுகிறது. தேசிய, கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு கடன்களை வழங்குவதை, மாவட்ட முன்னோடி வங்கி கண்காணித்து ஊக்கப்படுத்துகிறது.
கடன் வழங்க மத்திய, மாநில அரசுகள் அதிகளவில் நிதி ஒதுக்குகின்றன.

இலக்கு: ஆண்டு தோறும் இதற்கான திட்ட வரைவு அறிக்கையை முன்னோடி வங்கி வெளியிடுகிறது. இதில் விவசாயம், அதை சார்ந்த தொழில் வளர்ச்சி, சிறு, குறுந்தொழில்கள், மகளிர் குழு, மாணவர்களுக்கான கல்வி கடன்கள் குறித்து வகைப்படுத்தப்படுகிறது.

நடப்பு ஆண்டில் (2010-11), முன்னுரிமை, விவசாயம், தொழில்சார்ந்த கடன் 970.51 கோடி ரூபாய் வரை வழங்க, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.முன்னுரிமை: மாவட்ட மக்கள் தொகையில், 4.97 லட்சம் பேர் விவசாயம், அதை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் விவசாயத்தில் போதிய வருமானம் கிடைப்பதில்லை.இதனால் இளைஞர்கள் வேலை தேடி வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். விவசாய தொழிலாளர்கள் பிழைப்புக்காக இடம் பெயர்கின்றனர். இதனால், விவசாய உற்பத்தியில் பெருமளவு பாதிக்கப்படுகிறது.இதை தவிர்க்க, மற்ற துறைகளை விட விவசாயத்திற்கு அதிகபட்சமாக 566 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்து மகளிர் குழு, கல்வி கடன்களுக்கு 263 கோடி; சிறு, குறு தொழில்களுக்கு 142 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்த கடன் இலக்கு கடந்த ஆண்டை விட 49.63 கோடி ரூபாய் கூடுதலாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.முன்னோடி வங்கி மேலாளர் பெருமாள் கூறுகையில்,"ஆண்டு கடன் திட்டத்தில், தேசிய, தனியார், கூட்டுறவு வங்கிகளின் 182 கிளைகள் மூலம், தலா 5.30 கோடி ரூபாய் வீதம் வழங்கப்படும். இக்கடன் திட்டம், கிராமத்தினர் பயன்பெறும் வகையில் அமையும். விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், மகளிர் குழுவினரின் வருமானத்தை பெருக்கவும், கடன் திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்படும்," என்றார்.

**சேதமடைந்த வாழைகளுக்கு இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை**

சாயர்புரம்: கடந்த இரு தினங்களுக்கு முன் வீசிய சூறாவளிக் காற்றில் சேதமடைந்த வாழைகளுக்கு தகுந்த இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.கடந்த இரு தினங்களுக்கு முன் இரவு தூத்துக்குடி மாவட்டத்தில் பயங்கர சூறாவளிக் காற்று வீசியது.

இதில் சாயர்புரம் அருகே உள்ள பேய்க்குளம் பாசன பகுதிகள் மற்றும் பெட்டை குளம் பாசன பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த லட்சக்கணக்கான வாழைகள் சேதமடைந்தது. இதனால் சிவத்தையாபுரம், புளியநகர், சேர்வைகாரன்மடம், தங்கம்மாள்புரம், சிவஞானபுரம், சக்கம்மாள்புரம், கூட்டாம்புளி, குலையன்கரிசல், அத்திமரப்பட்டி, கோவங்காடு உட்பட பல ஊர்களை சேர்ந்த விவசாயிகளின் எதிர்காலமே கேள்விக் குறியாகியுள்ளது. இதுகுறித்து சேர்வைகாரன்மடம் விவசாயிகள் அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் தனுஸ்கோடி கூறியதாவது; பேய்க்குளம் மற்றும் பெட்டைகுளம் பாசன பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் நாங்கள் காலங்காலமாக ஸ்ரீவைகுண்டம் அணைகட்டின் வடகால் பாசனம் மூலம் விவசாயம் செய்து வருகிறோம். அதிக அளவில் கதலி, மலைஏத்தன், ரஸ்தாலி, ரோபஸ்ட்டா உள்ளிட்ட பல்வேறு ரகங்களில் வாழை பயிரிட்டுள்ளோம்.

இது எங்களுக்கு அறுவடை காலம், செலவையெல்லாம் முடித்து வரவை எதிர்பார்த்திருந்த வேளையில் எமனாக இந்த காற்று வந்து சேர்ந்து விட்டது. ஏற்கனவே நாங்கள் பல்வேறு இன்னல்களுக்கு நடுவில் விவசாயம் செய்து வருகிறோம். குறிப்பாக கிராமங்களில் தனியார் கம்பெனிகளின் பெருக்கத்தால் விவசாய வேலைகளுக்கு ஆள் கிடைப்பதில்லை. கூலியும் அதிகரித்து விட்டது. இது தவிர ரசாயன உரங்களும் தாராளமாக கிடைப்பதில்லை. இது தவிர சரியான பருவத்தில் சரியான அளவு மழை கிடைக்க வேண்டும். இதை அனைத்தையும் தாண்டி வந்தாலும் உற்பத்தி செய்யப்பட்ட வாழை தார்களுக்கு எதிர்பார்த்த விலை கிடைப்பதில்லை. இவ்வாறு தான் எங்கள் நிலை உள்ளது. இதில் இயற்கையின் சீற்றம் அனைத்தையும் ஒட்டு மொத்தமாக அழித்து விடுகிறது. இந்த ஆண்டு ஓரளவு மழை பெய்து அணையில் நீர் தேக்கி வைக்கப்பட்டதால் விவசாயம் நன்றாக இருந்தது. ஆனால் காற்றினால் அனைத்தையும் நாங்கள் இழந்து நிற்கிறோம். தற்போது ஏற்பட்டுள்ள நஷ்டத்தை எவ்வாறு ஈடு கட்டுவது என்று தெரியவில்லை. இது தவிர காற்றினால் சேதமடைந்த வாழைகளை அப்புறப்படுத்த நாங்கள் மேலும் செலவு செய்ய வேண்டியது உள்ளது.

இதனால் அரசு எங்கள் பகுதியை நேரில் பார்வையிட்டு ஏக்கருக்கு ரூ.70 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும். ஏனெனில் நாங்கள் ஒரு வாழையை வளர்த்து குலை தள்ள வைப்பதற்கும், அதை காக்கவும் ரூ.75 வரை செலவு செய்துள்ளோம். அறுவடை செய்யும் சமயத்தில் அனைத்தையும் இழந்து நிற்கின்றோம் இவ்வாறு அவர் கூறினார்.

**ஆறுமுகநேரி பகுதி விவசாயிகள் முன் கார் சாகுபடியை துவங்க குழப்பம்**

ஆறுமுகநேரி: ஆறுமுகநேரி சுற்றுப் பகுதியில் பிந்திய பிசான சாகுபடி செய்ததனால் முன்கார் சாகுபடி துவங்க விவசாயிகள் குழம்புகின்றனர். கடைமடை பாசனத்திற்கு தட்டுப்பாடு இன்றி தண்ணீர் வழங்க உத்திரவாதம் கிடைக்குமா என எதிர்பார்க்கின்றனர்.

தாமிரபரணி ஆற்றில் ஸ்ரீவைகுண்டம் தென்கால் பாசனத்தின் கடைமடையில் ஆறுமுகநேரி பொய்யான்குளம், நல்லூர் கீழ குளம் பாசன பகுதிகள் உள்ளது. இங்கு பிசான பருவ சாகுபடி செய்யப்பட்டு தற்போது தான் அறுவடை பணிகள் முழுவீச்சில் நடந்து வருகிறது. குளத்திற்கு தண்ணீர் வருவதற்கு தாமதம் ஏற்பட்டதால் பிசான பருவ சாகுபடியை தாமதமாக துவக்கினர். இதனால் அறுவடையும் தாமதமாக நடந்து வருகிறது. இந்த பாசன குளங்களுக்கு முன்பு உள்ள குளங்களின் பாசன பகுதிகளில் பிசான பருவ சாகுபடி அறுவடை பணிகள் முடிவடைந்து முன்கார் சாகுபடி பணிகள் ஆரம்பமாகி உள்ளது. அப்பகுதிகளில் அறுவடை முடிந்த வயல்களில் உடனடியாக உழவு போட்டு நாற்று பாவும் பணி நடந்து வருகிறது. சில வயல்களில் பயிர் நடுகை செய்வதற்கும் தயாராகிவிட்டது. இந்நிலையில் கடைமடை பாசனமான இப்பகுதியில் அறுவடையே முடியாமல் உள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் அறுவடை முடிந்து விட்டதால் இங்குள்ள அறுவடை மிஷின்கள் கர்நாடக மாநிலத்திற்கு சென்று விட்டதாக கூறப்படுகிறது.

இதனால் அறுவடை மிஷினுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இருக்கின்ற ஒரு சில மிஷின்களை கொண்டு இரவு பகலாக அறுவடை செய்து வருகின்றனர். 15 முதல் 20 நாட்களுக்கு முன்பே அறுவடை செய்ய வேண்டிய பயிர்கள் கூட அறுவடை செய்யாமல் வயலில் காய்ந்து, தரைசாய்ந்து கிடக்கிறது. இந்நிலையில் தாமிரபரணி ஆற்றின் கடைசி அணைக்கட்டான ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு வடகால், தென்கால் பாசனத்தில் 16 ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்துக்கு முன்கார் சாகுபடி செய்ய அரசு அனுமதி அளித்துள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் இவை எந்தெந்த இடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற விபரங்கள் அரசு சார்பில் வெளியிடப்படாததால் விவசாயிகள் குழம்பி உள்ளனர்.

அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுவதை வைத்து முன்கார் சாகுபடியை துவக்கலாமா, வேண்டாமா என்ற குழப்பமும் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. இயற்கையின் கருணையினால் கோடை மழை பெய்தால் தான் தப்பமுடியும். இயற்கை ஏமாற்றிவிட்டால் தண்ணீர் இன்றி பயிர் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதனிடையே அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் வர உள்ளதால் விவசாயிகளை அரசு கைவிடாது என்ற எண்ணமும் விவசாயிகள் மத்தியில் உள்ளது. எனவே கடைமடை பாசன பகுதியில் முன்கார் சாகுபடி பணிகள் துவங்க அரசு சார்பில் உரிய அனுமதியினை உறுதியுடன் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**ஏரலில் சூறாவளிக் காற்று ஆயிரக்கணக்கான வாழைகள் சேதம்**

ஏரல் : ஏரல் பகுதியில் வீசிய சூறாவளி க்காற்றினால் ஆயிரக் கணக்கான வாழை கள் சேதமடைந் துள்ளன.

ஸ்ரீவைகுண்டம் தாலுகா பகுதியில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயம் நடந்து வருகிறது. கடந்த 10 வருடங்களாக வாழை விவசாயத்திற்கு விவசாயிகள் நல்ல பலன் பெற்று வந்தனர். இதனால் வாழை விவசாயம் சீராக நடந்து வந்தது. இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு யாரும் எதிர்பார்க்காத வகையில் இரவு ஏற்பட்ட சூறாவளிக் காற்றுடன் கூடிய மழையில் ஏராளமான வாழைகள் வேரோடு சாய்ந்து விழுந்தது. இதனால் விவசாயிகளுக்கு பெரிய அளவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் இதுபோன்ற சூறாவளிக் காற்று கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு வீசியுள்ளது. அதன் பிறகு இதுவரை இது போன்ற காற்று வீசாததால் விவசாயிகளும் சீரான விவசாயம் செய்து வந்தனர்.

ஆனால் 15 ஆண்டுகளுக்கு பின் ஏற்பட்ட இந்த சூறாவளியால் வாழை விவசாயிகள் மிகவும் கலக்கம் அடைந்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் வாழை மரத்திற்கு சித்திரை மாதத்தில் கம்பு கொடுப்பது வழக்கம். ஆனால் தற்போது இந்த அளவுக்கு காற்று தாக்கக் கூடும் என்று யாரும் நினைக்காததால் கம்பு கொடுப்பதில் அலட்சியமாக இருந்தனர். மேலும் பலர் வாங்கி வைத்த கம்புகளையும் முட்டு கொடுக்காமல் கிடப்பில் போட்டு வைத்தனர். ஆனால் புரட்டி போட்ட சூறாவளிக் காற்று ஒட்டு மொத்த வாழையையும் சீரழித்து விட்டதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்து உள்ளனர்.

இதனால் வாழை விவசாயத்தை தொடர்வதா அல்லது விட்டு விடுவதா என்ற நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். சூறாவளி காற்றையடுத்து விவசாயிகள் அனைவரும் கம்பு வாங்க சென்றதால் கம்பு கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். இதனால் கம்புகளின் விலையும் அதிகரித்துள்ளது. விழுந்த வாழைகளை விட்டு விட்டு இருக்கும் வாழையை காப்பாற்றலாம் என்று கம்பு வாங்க சென்றால் கம்புகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது விவசாயிகளிடையே மேலும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 15 ஆண்டுகளாக வாழை விவசாயத்தில் ஏற்படாத இந்த இடர்பாடு திடீரென ஏற்பட்டுள்ளதால் வாழை விவசாயிகள் விவசாயத்தை தொடர்ந்து செய்வதா அல்லது முற்றுப்புள்ளி வைக்கவா? என்ற கேள்வி அனைத்து விவசாயிகளுக்கும் எழுந்துள்ளது. வாழை வாழவும் வைக்கும், தாழவும் வைக்கும் என்ற பழமொழி பல ஆண்டுகளுக்கு பிறகு புரியவைத்துள்ளது.

**விதை பண்ணையில்அதிகாரி ஆய்வு**

தென்காசி:காளத்திமடம் விதை பண்ணையில் விதை சான்று உதவி இயக்குநர் ஆய்வு நடத்தினார்.ஆலங்குளம் வட்டாரம் காளத்திமடம் ராமர் வயலில் அமைக்கப்பட்டுள்ள நிலக்கடலை விதை பண்ணையில் மாவட்ட விதை சான்று உதவி இயக்குநர் பிரம்மநாயகம் ஆய்வு செய்து பேசும் போது, 'நிலக்கடலை விதைத்த 35வது நாள் ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சம் இட்டு மண் அமைப்பதினால் பொக்கு கடலை ஏற்படுவது தடுக்கப்படுவதுடன் திரட்சியான கடலை காய் பெறவும், எண்ணெய் சத்து அதிகப்படி எடை கூடுதல் மகசூல் பெருக்கவும் வழி ஏற்படும்' என்றார்.

இலை சுருட்டை நோயை கட்டுப்படுத்த எண்டோசல்பான் போன்ற தொடு நச்சு மருந்தினை 1 லிட்டர் நீரில் 2 டை என்ற விகிதத்தில் தெளிக்க வேண்டும். காலை அல்லது மாலை நேரங்களில் மருந்து தெளிக்க வேண்டும் என விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.ஆலங்குளம் விதை சான்று அலுவலர் சிவகுருநாதன் பயிர் எண்ணிக்கை பராமரிப்பு பற்றி விளக்கினார். உதவி வேளாண்மை அலுவலர் குமரேசன் ஊட்டமேற்றிய உரம் தயாரிப்பு செயல் விளக்கம் செய்து காட்டினார். உதவி விதை அலுவலர் திவான் பக்கீர் முகைதீன், சுப்புராம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**குறைந்த விலைக்கு பதனீர் கொள்முதல்: விவசாயிகள் விரக்தி**

ஸ்ரீவில்லிபுத்தூர்: பதனீர் கொள்முதல் விலையை உயர்த்தி அரசு அறிவித்தாலும், ஸ்ரீவி.,யில் குறைவான விலைக்கே கொள்முதல் செய்யப்படுவதால், பனை விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.ஸ்ரீவி., சுற்றுப்பகுதிகளில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான பனைமரங்கள் உள்ளன.

இவற்றை நம்பி ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. தற்போது பதனீர் இறக்கும் தொழில் தீவிரமாக நடந்து வருகிறது. ஸ்ரீவி.,யில் இயங்கும் மதுரை, விருதுநகர் திண்டுக்கல் மாவட்ட பனை வெல்ல விற்பனை கூட்டுறவுசங்கம், தமிழ்நாடு மாநில பனை வெல்லம்,தும்பு விற்பனை மைய ஊழியர்கள், பனை மர காடுகளுக்கு நேரிடையாக சென்று பதனீர் கொள் முதல் செய்கின்றனர். பின் அதை பதப்படுத்தி பாலீத்தீன் பாக்கெட்டுகளில் நிரப்பி விருதுநகர், மதுரை, கோவில்பட்டி உட்பட பல இடங்களிலும் விற்பனை செய்கின்றனர்.இந்தாண்டு பதனீர் கொள்முதல் விலை லிட்டருக்கு 10 ரூபாயாக அரசு அறிவித்துள்ளது. ஆனால் கூட்டுறவு சங்கங்கள் 6.50 ரூபாய்க்கே கொள்முதல் செய்கின்றன.

காடுகளுக்கே சென்று நேரிடையாக கொள்முதல் செய்வதால் ஏற்படும் செலவை ஈடுகட்டவும், இருதரப்பிற்கும் நஷ்டம் ஏற்படாத தொகைக்கு பதனீர் கொள்முதல் செய்யப்படுவதாக கூட்டுறவு ஊழியர்கள் தெரிவித்தனர். இதனால் பனை விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.

**வெங்காய சாகுபடியாளர் கூட்டம்**

பல்லடம்: வெங்காய சாகுபடியாளர்களுக்கான கூட்டம், பல்லடத்தில் நடந்தது; அதிக மகசூல் பெற வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கினர். கோவை மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் வெங்காய சாகுபடி விவசாயிகளுக்கான கூட்டம், பல்லடம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது. வேளாண் துணை இயக்குனர் சுப்ரமணியம் தலைமை வகித்தார். பல்லடம் வேளாண் உதவி இயக்குனர் பத்மினி முன்னிலை வகித்தார். வேளாண் அலுவலர் ரத்தினம் வரவேற்றார். கூட்டத்தில், வெங்காய விதையை பிரித்தெடுக்கும் முறை, விதை உலர்த்தல், விதை சுத்திகரிப்பு, விதை சேமிப்பு, வெங்காயம் அறுவடைக்கு ஏற்ற தருணம், நாற்றங்காலில் வளமான நாற்றுகள் பெறுதல், அறுவடைக்குபின் நேர்த்தி, உரமிடுதல், வெங்காய விதை உற்பத்தி மற்றும் அதிக மகசூல் பெறுவது குறித்து விவசாயிகளுக்கு வேளாண் அலுவலர்கள், தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் விளக்கினர்.
ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள், 'தனியாரிடம் விதை வெங்காயம் விலை அதிகமாக இருப்பதால், முன்பு போல் தோட்டக்கலைத் துறையே விதைகள் வினியோகிக்க வேண்டும்' என, கோரிக்கை விடுத்தனர். பொங்கலூர் வேளாண் உதவி இயக்குனர் ரவி, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் மணி மாறன், வாவிபாளையம் ஊராட்சி தலைவர் பார்த்தசாரதி, பாசன சபை தலைவர்கள் ஈஸ்வரமூர்த்தி, சிவசாமி, அமராவதியப்பன், ஆறுமுகம் மற்றும் பொங்கலூர், பல்லடம் பகுதி வெங்காய சாகுபடி விவ சாயிகள் பங்கேற்றனர். பல்லடம் வேளாண் உதவி அலுவலர் செல்வராஜ் நன்றி கூறினார்.

**கிடப்பில் போடப்பட்ட வேளாண் துறை திட்டங்கள் திணறும் விவசாயிகள்**

உடுமலை: வேளாண் துறை சார்பில், ஒவ்வொரு வட்டாரத்திலும், நடமாடும் மண் பரிசோதனை நிலையம் மற்றும் வானிலை ஆய்வு மையம் மையம் அமைக்கும் திட்டம் கிடப் பில் போடப் பட்டுள்ளதால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். உடுமலை பகுதியில் ஒன்றரை லட்சம் ஏக்கர் பரப்பளவில் விவசாயம்

மேற்கொள்ளப்படுகிறது. முக்கிய பாசன திட்டங்களான, அமராவதி பாசனத்தில் நெல், கரும்பு பிரதானமாகவும், பி.ஏ.பி., பாசனத்தில் மக்காச்சோளம் மற்றும் காய்கறி பயிர்களும் பயிரிடப்படுகிறது. தென்னை சாகுபடியும் அதிகளவு உள்ளது.

தொடர்ந்து ஒரே வகையான பயிர்களை பயிரிடுவது மற்றும் மண்ணிற்கு தேவையான உரங்கள் குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு இல்லை. மண் வளம் பாதிக்கப்பட்டு, சாகுபடி செலவு அதிகரித்துள்ளதுடன், விளைச்சலும் தொடர்ந்து குறைந்து வருவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். வேளாண்துறையினர், மண் பரிசோதனை செய்து தகுந்த உரங்களை பயன்படுத்தவும், மண்ணுக்கேற்ற பயிர் சாகுபடியையும் வலியுறுத்துகின்றனர். ஆனால், மண் பரிசோதனை செய்ய உடுமலை பகுதியில் மண் பரிசோதனை நிலையம் இல்லை. கோவை மற்றும் திருப்பூர் மாவட்டத்திற்கு கோவை வேளாண் பல்கலைகழகத்தில் மட்டும் பரிசோதனை மையம் உள்ளது. இங்கு கொடுத்தாலும், உரிய நேரத்தில் முடிவுகள் கிடைக்காது. விவசாயிகளின் அலைச்சலை தவிர்க்கும் வகையில், உடுமலையில் மண் பரிசோதனை நிலையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். கடந்தாண்டு உடுமலையில் நடந்த மக்காச்சோள கருத்தரங்கில் ஒவ்வொரு வேளாண்துறை வட்டாரத்திலும் நடமாடும் பரிசோதனை மையம் அமைக்கப்படும், வேளாண் பட்டதாரிகள் மற்றும் இதர பட்டதாரி இளைஞர்களுக்கு மூன்று லட்ச ரூபாய் வரை அரசு மானியம் வழங்குகிறது என தெரிவிக்கப் பட்டது. ஆனால், இதுவரை நடமாடும் மண் பரிசோனை நிலையம் துவங்கப் படவில்லை. இதனால், விவசாயிகள் மண் பரிசோதனை குறித்த விழிப்புணர்வு இல்லாமல் தொடர்ந்து மண்ணை பாழ்படுத்தி வருகின்றனர். கிடப்பில் வானிலை ஆய்வு மையம்: மழையளவு ஒவ்வொரு பகுதிக்கும் மாறும் நிலையில் விவசாயிகள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது.

எதிர்பாராத மழை, குறைந்த மழைக்கு நடவு பணிகளை மேற்கொள்வதால் பிரச்னை ஏற்படுகிறது. இதற்கு தீர்வாக டுமலை, மடத்துக்குளம், குடிமங்கலம் உட்பட 20 வட்டாரங்களிலும் வானிலை ஆய்வு மையம் நிறுவப் படும் என தெரிவிக்கப்பட்டது. வேளாண் விரிவாக்க மையங்களின் கீழ் இடம் தேர்வு செய்யப்பட்டு மழைமானி, காற்று, ஈரப்பதம், வெப்பம் ஆகியவை கண்டறியப் படும். சேகரிக்கப்படும் வானிலை நிலவரங்கள் 'இன்டர்நெட்' இணைப்பு மூலம் வேளாண் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்படும். பல்கலைகழகத்திலிருந்து உடனடியாக விவசாயிகளுக்கு 48 மணி நேரத்திற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அளிக்கப் படும் என அதிகாரிகள் கடந்தாண்டு தெரிவித்தனர்.

இந்த திட்டத்தை விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர். அறிவிப்பு வெளியாகி ஓராண்டாகியும் எந்த பகுதியிலும் முதற்கட்ட பணிகள் கூட மேற்கொள்ளப்படவில்லை. விவசாய சாகுபடியை மேம்படுத்த அரசு அதிகாரிகள் அறிவித்த திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளதால் விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர்.

**மலர்ந்தன 'பெட்டூனியா' பார்க்க... பார்க்க... விருந்து**

ஏப்ரல் 10,2010,00:00 IST

---



ஊட்டி: ஊட்டியில் கோடை சீசனுக்கு தயார்படுத்தப்பட்ட நாற்றுகளில், 'பெட்டூனியா' மலர்கள், பார்வையாளர்களை வசீகரிக்கின்றன. நீலகிரி மாவட்டத்தில் கோடைசீசன் களை கட்டியுள்ள நிலையில், சுற்றுலாப் பயணிகளை குதூகலப்படுத்த பல நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. கோடை விழாவை ரோஜா மலர்களால் வரவேற்கும் வகையில், ரோஜா கண்காட்சி மே 8, 9ம் தேதிகளில் நடத்தப்படுகிறது. ஊட்டி மலர் கண்காட்சி 14,15, 16ம் தேதிகளில், 22, 23ம் தேதிகளில் குன்னூரில் பழக்கண்காட்சி, 29, 30ம் தேதிகளில் கோத்தகிரியில் காய்கறி கண்காட்சி நடத்தப்படுகிறது. மலர் கண்காட்சியின் போது, பார்வையாளர்களை கவர, அதிகபட்சமாக 15 ஆயிரம் மலர் தொட்டிகள் காட்சிப்படுத்தப்பட உள்ளன; உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மலர் வகைகளை சேர்ந்த மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. மரிகோல்டு, சூரியகாந்தி, கார்னேஷன், ரோஜா மற்றும் வெளிநாட்டு மலர்களான பெட்டூனியா, பேன்சி உட்பட 30க்கும் மேற்பட்ட மலர்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில், 'பெட்டூனியா' மலர்கள் முன்னதாகவே 'முகம்' காட்டியுள்ளன. இதே போல, நடப்பாண்டின் 'ஸ்டார்' அந்தஸ்தை பெற்ற 'டூலிப்ஸ்' மலர்களும் மலர்ந்துள்ளன.

வரும் சில நாட்களில் 'மிக்கிமவுஸ்' என்று செல்லமாக அழைக்கப்படும் 'பேன்சி' ரக மலர்களும் மலர்ந்து விடும் என்பதால், பார்வையாளர்கள் மகிழ்வர் என பூங்கா நிர்வாகத்தினர் பெருமிதம் தெரிவித்துள்ளனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

***பிலிப்பைன்ஸ், இலங்கை நாடுகளில் இருந்து 'கள்' இறக்குமதி செய்து விற்பனை செய்ய வேண்டும் தமிழக அரசுக்கு 'கள்' இயக்கம் கோரிக்கை***

தாராபுரம், ஏப்.10–

பிலிப்பைன்ஸ், இலங்கை நாடுகளில் இருந்து கள் இறக்குமதி செய்து விற்பனை செய்ய வேண்டும் என தமிழக அரசுக்கு கள் இயக்கம் கோரிக்கை விடுத்து உள்ளது.

ஆலோசனை கூட்டம்

தமிழ்நாடு கள் இயக்கத்தின் ஆலோசனை கூட்டம் தாராபுரத்தில் நடைபெற்றது. காங்கிரஸ் மாவட்ட செயலாளர் மாசானம், உப்பாறு பாசன விவசாயிகள் சங்க செயலாளர் ஈஸ்வரன், கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க செயலாளர் தங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தமிழ்நாடு கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் செ.நல்லசாமி பேசினார். பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

இறக்குமதி செய்ய வேண்டும்

கள்ளில் குறைவான அளவு போதை உள்ள காரணத்தால், அதில் அதிகமாக போதை கலந்து விற்பனை செய்யப்படுகிறது என்று கடந்த 1987–ம் ஆண்டு முதல் தமிழகத்தில் கள் விற்பனைக்கு அரசு தடைவிதித்து உள்ளது. தமிழக மக்களின் இயற்கை பானமாகிய கள்ளை குடிப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் தமிழக அரசு தடை செய்து உள்ளதால் தென்னை மற்றும் பனை மர விவசாயிகள் பெரும் துயரத்துக்கு ஆளாகி உள்ளனர்.

குறைவான போதை உள்ள கள்ளில், அதிகமாக போதை கலந்து விற்பனை செய்வதை தடுக்க முடியாது என்கிற காரணத்தால், அதை விற்பனை செய்ய தடைவிதித்துள்ள தமிழக அரசு, பிலிப்பைன்ஸ், இலங்கை போன்ற நாடுகளில் பாட்டில்களில் அடைத்து விற்பனை செய்யப்படும் கள்ளை, தமிழகத்துக்கு இறக்குமதி செய்து விற்பனை செய்ய வேண்டும்.

மே 14–ந் தேதி ஆர்ப்பாட்டம்

கள்ளு கடைகளை திறப்பது தொடர்பாக, நீதிபதி சிவசுப்பிரமணியம் தலைமையில் ஒரு குழுவை கடந்த மே மாதம் 31–ந் தேதி தமிழக அரசு அமைத்தது. அந்த குழு 6 மாதத்துக்குள் அறிக்கையை தாக்கல் செய்யும் என்றும் அறிவித்தது. ஆனால் அந்த குழு தனது அறிக்கையை அரசுக்கு தாக்கல் செய்து 2 மாதங்களுக்கு மேல் ஆகியும், அறிக்கை குறித்து தமிழக அரசு எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. எனவே தற்போது நடைபெற்றுக்கொண்டு இருக்கும் சட்டசபை கூட்டத்தில் எங்களுக்கு ஒரு சாதகமான முடிவை தமிழக அரசு அறிவிக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்து இருக்கிறோம். எந்த முடிவையும் அறிவிக்கவில்லை என்றால், வருகிற மே மாதம் 14–ந் தேதி தலைமை செயலகம் முன் கறுப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்து உள்ளோம். இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழகத்தில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொள்வார்கள். இவ்வாறு செ.நல்லசாமி கூறினார்.

**கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத நிலை சோயா புண்ணாக்கு ஏற்றுமதி கடும் சரிவு**

பார்கவ் திரிவேதி

அகமதாபாத்

இந்தியா, சோயா புண்ணாக்கு ஏற்றுமதியில் ஆசியாவில் முதலிடத்தில் உள்ளது. சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், நம் நாட்டின் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி கடந்த ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 50 சதவீதம் சரிவடைந்து 21.25 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. முந்தைய 2008–09–ஆம் நிதி ஆண்டில் இது வியக்கத்தக்க வகையில் 42.45 லட்சம் டன்னாக உயர்ந்து இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னியச் செலாவணி

ஏற்றுமதி வாயிலாக அதிக அளவில் அன்னியச் செலாவணி வருவாயை ஈட்டித் தரும் பொருள்களின் சோயா புண்ணாக்கும் ஒன்றாகும். சென்ற 2009–10–ஆம் ஆண்டில் ரூபாய் மதிப்பின் அடிப்படையில் இதன் ஏற்றுமதி 48.50 சதவீதம் சரிவடைந்து ரூ.7,485 கோடியிலிருந்து ரூ.3,845 கோடியாக குறைந்துள்ளது. இதனையடுத்து, இதன் வாயிலான அன்னியச் செலாவணி வருவாய் 80 கோடி டாலர் (ரூ.3,640 கோடி) குறைந்துள்ளது.

சென்ற மார்ச் மாதத்தில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 23 சதவீதம் குறைந்து 2.22 லட்சம் டன்னிலிருந்து 1.69 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இதன் ஏற்றுமதி தொடர்ந்து சரிவடைந்து வருகிறது.

சோயா புண்ணாக்கு ஏற்றுமதியில் பிரேசில் மற்றும் அர்ஜென்டினா ஆகிய நாடுகள் முன்னிலை

வகிக்கின்றன. இந்நாடுகளில், சென்ற கரீஃப் பருவத்தில் இவற்றின் உற்பத்தி முறையே 6.7 கோடி டன் மற்றும் 5.30 கோடி டன்னாக அதிகரித்துள்ளது.

சோயாபீன் உற்பத்தியில், உலக அளவில் முதலிடத்தில் உள்ள அமெரிக்காவிலும் உற்பத்தி 9.20 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. இதனையடுத்து, சர்வதேச அளவில் இதன் உற்பத்தி 25 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. இதனால், உலக அளவில் சோயா புண்ணாக்கு அளிப்பு மிகவும் உயர்ந்துள்ளது. நம் நாட்டின் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி குறைந்ததற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

சோயா எண்ணெய்

இந்நிலையில், உள்நாட்டில் சோயா எண்ணெய்க்கு போதிய விலை கிடைக்கவில்லை. ஒரு டன் சோயாபீன் விலை ரூ.20,000–ஆக உள்ளது. இதிலிருந்து கிடைக்கும் சோயா எண்ணெய் மற்றும் புண்ணாக்கு ஆகியவற்றின் விற்பனை வாயிலாக ரூ.19,400 மட்டுமே ஈட்டப்படுகிறது. இதனால், சோயாபீனை வாங்குவதில் சோயா எண்ணெய் தயாரிப்பு நிறுவனங்கள் தயக்கம் காட்டி வருகின்றன.

**உணவு தானியங்களுக்கான அரசின் மானிய செலவு 65 சதவீதம் உயர்வு**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், மத்திய அரசின் உணவு தானியங்களுக்கான மானிய செலவினம் ரூ.72,000 கோடியை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில் ஏற்பட்ட மானிய செலவை விட 65 சதவீதம் அதிகமாக இருக்கும்.

கொள்முதல்

மத்திய அரசு, மக்கள் நலன் கருதி அதிக அளவில் உணவு தானியங்களை கொள்முதல் செய்வதுடன், இவற்றை அதிக விலை கொடுத்து வாங்குகிறது. இதன் காரணமாகவே, மானியச் செலவினம் அதிகரிப்பதாக தெரிய வந்துள்ளது.

மத்திய அரசு, பொதுத் துறையைச் சேர்ந்த இந்திய உணவு கழகம் (எஃப்.சி.ஐ) உள்ளிட்ட முகமை அமைப்புகள் வாயிலாக, விவசாயிகளிடம் இருந்து உணவு தானியங்களை கொள்முதல் செய்கிறது. உணவு தானியங்களை, மத்திய அரசு குறைந்தபட்ச ஆதரவு விலையில், அதிக விலை கொடுத்து வாங்கும் நிலையில், இவற்றை பொது விநியோக திட்டத்தின் கீழ் ரேசன் கடைகள் வாயிலாக குறைந்த விலைக்கு விற்பனை செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்ற நிதி ஆண்டிற்கு, மத்திய அரசு உணவு தானிய மானியத்திற்காக பட்ஜெட்டில் ரூ.58,228 கோடியை ஒதுக்கீடு செய்திருந்தது. ஆனால், சென்ற அவ்வாண்டில், மானியச் சுமை ரூ.72,234.98 கோடியாக அதிகரித்துள்ளது என அரசின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

65 சதவீதம் உயர்வு

கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில், உணவு தானிய மானியத்திற்காக மத்திய அரசு ரூ.43,668 கோடியை செலவிட்டிருந்தது. ஆக, முந்தைய ஆண்டை விட, சென்ற ஆண்டில் உணவு தானியங்களுக்கான மானியச் சுமை 65 சதவீதம் அதிகரித்துள்ளது. சென்ற நிதி ஆண்டில், மத்திய அரசு 5.90 கோடி டன் அரிசி மற்றும் கோதுமையை கொள்முதல் செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**முள்ளங்கி பயிரிடும் கூடலூர் விவசாயிகள்**



கூடலூர் தோட்டமூலா பகுதியில் உள்ள விவசாயி ஒருவரின் தோட்டத்தில் முள்ளங்கி பயிரிட்டுள்ளதை படத்தில் காணலாம்.

*கூடலூர், ஏப்.10–*

*முள்ளங்கி விவசாயம் செய்வதில் கூடலூர் விவ சாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.*

*பலதரப்பட்ட விவசாயம்*

*கூடலூர் பகுதியில் கிராம்பு, குறுமிளகு, காபி, தேயிலை, ஏலக்காய், இஞ்சி உள்ளிட்ட பணப்பயிர்கள் விளைவிக்கப் படுகின்றன. இதற்கு இணை யாக காய்கறி வகைகளும் பயிரிடப்படுகின்றன. ஒவ் வொரு காலநிலைகளுக்கு ஏற்ப காய்கறிகள் விவசாயம் செய்து விவசாயிகள் கணிச மான வருவாயை ஈட்டி வரு கின்றனர்.*

*கூடலூர், ஸ்ரீமதுரை, மசின குடி, தொரப்பள்ளி, பந்தலூர் ஆகிய பகுதிகளில் வாழை, நெல் அதிகளவு விளைவிக்கப் படுகின்றன. குறிப்பிட்ட பயிர் களை மட்டும் எதிர்பார்த்து விவசாயம் செய்யாமல் பல தரப்பட்ட காய்கறி செடிகளை பயிரிடுவதில் கூடலூர் விவசாயிகள் முன்னோடியாக விளங்கி வருகின்றனர்.*

*ஆர்வம்*

*தற்போது கூடலூர் பகுதியில் கோடை வெயில் அனல் பறக்கிறது. இதனால் வெப்பம் தாங்க முடியாமல் பொதுமக் கள் சிரமப்பட்டு வருகின்றனர். சமவெளி பகுதிகளில் விளையக்கூடிய பாகற்காய் பயிர், தற்போது கூடலூர் பகுதியிலும் பல நூற்றுக் கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட் டுள்ளன. இதே போல் முள்ளங்கி பயிர்களை யும் கூடலூர் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். குறிப்பாக பாகற்காய் கொடி களின் அருகே ஊடுபயிராக முள் ளங்கி செடிகள் பயிரிடப் பட்டுள்ளன.*

*கூடலூர் தோட்டமூலா பகுதியில் பாகற்காயோடு, முள்ளங்கி விவசாயமும் களை கட்டி உள்ளது. கிலோ முள் ளங்கி ரூ.5 வரை கொள்முதல் செய்யப்படுகிறது.*

*காய்கறி கடைகளில் ரூ.10 முதல் ரூ.12 வரை விற்கப்படு கிறது. முள்ளிங்கிக்கு நல்ல விலை கிடைப்பதால் விவ சாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.*

***மஞ்சூர் பகுதி கூட்டுறவு தொழிற்சாலைகளில் பச்சை தேயிலைக்கு மாதத விலையாக ரூ.9.50 காசு நிர்ணயம்***

மஞ்சூர், ஏப்.10–
மஞ்சூர் பகுதி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை களில் ஒரு கிலோ பச்சை தேயிலைக்கு மாத விலையாக ரூ.9.50 காசு நிர்ணயிக்கப்பட் டுள்ளது.
கூட்டுறவு தொழிற்சாலைகள்
நீலகிரி மாவட்டத்தில் சுமார் 100–க்கும் மேற்பட்ட தனியார் தேயிலை தொழிற் சாலைகளும், 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன. பெரும் பாலான தனியார் தேயிலை தொழிற்சாலைகளில் வாராந் திர விலை நிர்ணயமும், கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் மாதாந்திர விலை நிர்ணயமும் செய்யப் பட்டு வருகிறது.
கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் மாதாந்திர விலை நிர்ணயத்தை குன்னூர் இன்கோசர்வ் நிர்வாகம் நிர் ணயம் செய்கிறது.
ரூ.11 நிர்ணயம்
இந்த நிலையில் மஞ்சூர் பகுதிகளில் இயங்கி வரும் கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் கடந்த மார்ச் மாதத்தில் விவசாயிகளால் வினியோகம் செய்யப்பட்ட பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் கீழ்க்கண்டவாறு செய்யப்பட்டுள்ளது.
பிக்கட்டி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் ஒரு கிலோ பச்சை தேயிலைக்கு ரூ.9.50 காசு எனவும், கூடுத லாக ரூ.1.50 காசு என சேர்த்து ரூ.11 என விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.
கவலை
கைக்காட்டி, குந்தா (எடக் காடு) ஆகிய கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் ஒரு கிலோ பச்சை தேயிலைக்கு ரூ.9.50 காசு எனவும், கூடுத லாக ரூ.1 என சேர்த்து ரூ.10.50 எனவும், மஞ்சூர், மகாலிங்கா ஆகிய கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் ரூ.9.50 காசு எனவும், கிண்ணக்கொரை, மேற்கு நாடு, இத்தலார் ஆகிய கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் ஒரு கிலோ பச்சை தேயிலைக்கு ரூ.9.25 எனவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் கடந்த பிப்ரவரி மாதம் நிர்ணயித்த விலையை காட்டிலும், தற்போது ரூ.3 முதல் ரூ.4 வரை விலை குறைந் துள்ளதால் விவசாயிகள் மிக வும் கவலை அடைந்துள்ள னர்.